<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 70/2022** நாள்: **09.04.2025** எ.ம.சா.**1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சுப்பிரமணியன்** | தொழில் | : | விவசாயம் |
| த/பெ | : | சடையப்பன் | கிராமம் | : | வரதராஜபுரம் |
| வயது | : | 60 | தாலுகா | : | உடுமலைபேட்டை |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை -</u>

நான் மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை பெற்று சாட்சியம் அளிக்கிறேன். 30.11.2018 அன்று விபத்து நடந்தது. நான் TVS XL TN 41 W 4882 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்டி சென்றேன். நான் வாகனத்தை சாலையூருக்கு மேற்கே உள்ள நான்கு ரோட்டில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்து கிழக்கே திரும்பி என்னுடைய இரு சக்கர வாகனத்தை சாலை ஓரத்தில் நிறுத்தி வைத்துவிட்டு சிறுநீர் கழிப்பதற்காக வாகனத்தின் அருகில் நின்று கொண்டிருந்தேன். அப்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஒரு நபர் TVS XL இரு சக்கர வாகனத்தில் வேகமாக வந்து என்னுடைய வண்டியில் மோதிவிட்டார். அதனால் என் வண்டியுடன் சேர்ந்து நான் கீழே விழுந்துவிட்டேன். பின்னர் வாகனத்தில் மோதிய நபரை பார்த்தேன் காணவில்லை. அதனால் நான் என் வீட்டிற்கு சென்றுவிட்டேன். இரண்டு நாட்கள் கழித்து காவல் துறையினர் வந்து வாகன விபத்து தொடர்பாக கூறி அந்த விபத்தில் சம்பந்தப்பட்ட நபர் இறந்துவிட்டடதாக தெரிவித்தனர். நான் அவர்களிடம் எனக்கு எதுவும் தெரியாது என்று கூறினேன். குற்ற வழக்கு தற்போதும் நடைபெற்று வருகிறது.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு வழக்கறிஞர் ஒருவர் இங்கு வருமாறு கூறினார். குற்றவியல் நீதிமன்றத்தில் நான் விபத்தை ஏற்படுத்தியதாக தான் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். என் மீது தவறு இல்லை என்று நான் எவ்வித முறையீடும் தனியாக செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு இறந்துபோன நபர் தான் என்னுடைய வாகனத்தில் வந்த மோதிவிட்டதாக யாரிடமும் சொல்லவில்லை. நான் தான் அதிவேகமாக வாகனத்தை ஓட்டி சென்று ரத்தினசாமி மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்றுவிட்டேன் என்றும், நான் கூறுவது போல சம்பவம் நடந்திருந்தால் எனக்கும் காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. வழக்கிற்காக என் மீது தவறு இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–C.Rajalingom.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.